www.lkedu.lk

மன்/முருங்கன் ஆரம்பப் பாடசாலை

கோவிட் 19 விசேட விடுமுறை பயிற்சி – 2020

கணிதம்

தரம் - 4.5

செயலட்டை - 01

தொகுப்பு ஆசிரியர்.இ.றஞ்சித்.மொறாய்ஸ்

MANMURUNKAN PRIMARY SCHOOL

1. திரைப்படம் ஒன்றினைப் பார்ப்பதற்காக 6784 பிள்ளைகளும் 685 வயது வந்தவர்களும் வந்திருந்தனர் எனின், திரைப்படம் பார்க்க வந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர்?
   .....

2. பண்ணையிலிருந்த மாடுகளின் கால்களின் எண்ணிக்கை 72 ஆகும். கோழிகளின் கால்களின் எண்ணிக்கை 102 ஆகும். இப்பண்ணையிலுள்ள மாடுகள், கோழிகளின் கூட்டுத்தொகை யாது? .....

3. மணிக்கு 74 கி.மீ வேகத்தில் பிரயாணம் செய்யும் பஸ் வண்டியொன்று x என்னுமிடத்திலிருந்து y எனும் இடத்தினை அடைய 3 மணி நேரம் எடுத்தது எனின், x இலிருந்து yஇற்கான தூரம் யாது? .....

4. மு.ப 10.30 மணிக்கு புறப்பட இருந்த பேருந்து 45 நிமிடங்கள் தாமதித்தே பயணத்தை ஆரம்பித்தது. பேருந்து தனது இடத்தை அடைய எடுத்த நேரம் 3 மணி 15 நிமிடங்கள் எனின், அப்பிரயாணம் முடிவடைந்த சேரம் யாது? .....

5. ஒரு நீர்த்தாங்கியின் மொத்தக் கொள்வனவு 80.5 லீட்டர் ஆகும். ஆதில் தற்போது 25.5 லீட்டர் ஊண்டு. தாங்கியை நிரப்ப இன்னும் தேவையான நீரின் அளவு யாது?
   .....

6. மாம்பழம் ஒன்றின் விலை ரூபாய் 16.00 ஆகும். கொய்யாப்பழம் ஒன்றின் விலை ரூபாய்26.00 ஆகும். எனின், 2 மாம்பழங்களையும் 2 கொய்யாப் பழங்களையும் வாங்கத் தேவையான பணம் எவ்வளவு? .....

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

தரம் 05 புலமை - 2023

தமிழ்

திங்கள் காலை 5 மணி
வியாழன் மாலை 7 மணி

சுற்றாடல்

செவ்வாய் மாலை 7 மணி
வெள்ளி காலை 5 மணி

நுண்ணறிவு

செவ்வாய் வியாழன்
காலை 5 மணி
கட்டணம் - 700/=

கணிதம்

புதன் காலை 5 மணி
புதன் மாலை 7 மணி

சிங்களம் ஆங்கிலம்

சனி காலை 5 மணி

பரீட்சை

சனி மாலை 7 மணி

பரீட்சை அலசல்

ஞாயிறு மாலை 7 மணி

வினாத்தாள் வகுப்பு

ஞாயிறு காலை 5 மணி

zoom

மாத கட்டணம் 2000/=

76667-4945

www.lkedu.lk

7. பெட்டியொன்றிலுள்ள சிவப்பு நிற முட்டைகளின் எண்ணிக்கை35 ஆகும். வெள்ளை நிற முட்டைகளின் எண்ணிக்கை அதனை விட 25 அதிகம் எனின், பெட்டியிலுள்ள மொத்த முட்டைகளின் எண்ணிக்கை யாது? ……..

8. 909 தோடம்பழங்களைச் சமமாகப் பிரித்து 9 கூடைகளில் இட்டால் ஒரு கூடையிலுள்ள தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது? ……..

9. அன்னாசிப்பழமொன்றின் நிறை பப்பாசிப்பழம் இரண்டின் நிறைக்குச் சமனாகும். 140 பப்பாசிப்பழங்களின் நிறைக்கு எத்தனை அன்னாசிப் பழங்களின் நிறை சமனாகும்? ……..

10. பெட்டியொன்றில் 765 மாங்காய்களும், இன்னுமொரு பெட்டியில் 184 மாம்பழங்களும் உள்ளன. இரண்டு பெட்டிகளிலுமுள்ள மாம்பழங்கள் எத்தனை? …….

11. தோடம்பழமொன்றின் விலை ரூபாய் 35.00 ஆகும். 5 தோடம்பழங்களின் விலை யாது? ……..

12. ஒரு வகுப்பில் 45 பிள்ளைகள் உள்ளனர். ஆவர்கள் சமமாக மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டனர் எனின், ஒரு குழுவிலுள்ள ஒரு குழுவிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது? ……

13. 3l 500ml குளிர்பானத்தினை 250ml வீதம் எத்தனை பாத்திரங்களுக்க ஊற்றலாம்? ……..

14. சாந்தி ஒரு மணித்தியாலத்தில் 40 மலர் மாலைகளைச் செய்வாள். பத்மினி 30 நிமிடங்களில் 10 மலர் மாலைகளைச் செய்வாள் எனின், சாந்தி 100 மாலைகளைச் செய்யும் போது பத்மினி எத்தனை மலர் மாலைகளைச் செய்வாள்? ……

15. குறிப்பிட்ட ஒரு வேலையைச் செய்வதற்கு 3 மனிதர்களுக்கு 4 நாட்கள் எடுக்கும் அதே வேலையை 6 மனிதர்களுக்குச் செய்வதற்கு எத்தனை நாட்கள் எடுக்கும்? ……..

MVMURUNKAN PRIMARY SCHOOL

www.lkedu.lk

16. மு.ப 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை மு.ப 11.30 மணிக்கு இடைவேளை வழங்கப்பட்டது பின் 11.45 கு ஆரம்பித்து பி.ப 1.30கு முடிந்தது எனின், அது வரை பாடசாலை நடைபெற்ற மணித்தியாலங்கள் எத்தனை? .....

17. ஒரு பெட்டியில் 615 பிஸ்கட்டுக்கள் உண்டு. ஒருவருக்கு 60 பிஸ்கட்டுக்கள் வீதம் எத்தனை பேருக்கு வழங்கலாம்? எஞ்சும் பிஸ்கட்டுக்கள் எத்தனை? .....

18. புகைவண்டியொன்றில் 743 பிரயாணிகள் உள்ளனர். முதல் தரிப்பிடத்தில் 83 பேர் இறங்கிச் சென்றதுடன் மேலும் 28 பேர் புகை வண்டியில் ஏறினர் எனின், இப்போது புகை வண்டியில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்? .....

19. அரிசி மூட்டையின் நிறை 50kg ஆகும். அதிலிருந்து 0.75kg எடுக்கப்பட்டது எனின், அதிலுள்ள அரிசியின் நிறை யாது? .....

20. 5l 200ml பாலினை 200ml கொண்ட எத்தனை பாத்திரங்களில் ஊற்றலாம்?.....



www.lkedu.lk

மன்/முருங்கன் ஆரம்பப் பாடசாலை

கோவிட் 19 விசேட விடுமுறை பயிற்சி – 2020

கணிதம்

தரம் - 4.5

செயலட்டை - 02

தொகுப்பு ஆசிரியர்.இ.றஞ்சித்.மொறாய்ஸ்

1) 3500ml கொள்வனவுள்ள பாத்திரத்தில் 1200ml நீர் உண்டு. அப்பாத்திரத்திற்கு இன்னும் 3 லீற்றர் நீர் ஊற்றினால் அப்பாத்திரத்திலிருந்து நிரம்பி வெளியேறும் நீரின் அளவு யாது? .....

2) ஒரு பிள்ளைக்கு 5 பிஸ்கட் வீதம் 32 பிள்ளைகளுக்குத் தேவையான பிஸ்கட்டுக்கள் எத்தனை? .....

3) 3)வருடத்தில் 30 தினங்களைக் கொண்ட மாதங்களை ஒழுங்கு முறைப்படி எழுதுக.
.....

4)பின்வரும் உருவில் 1/3 பகுதியை நிழற்றுக.

5).50kg கொள்ளக்கூடிய அரிசி மூட்டையில் 30kg 600g அரிசி உண்டு. அந்த மூட்டையை நிரப்புவதற்குத் தேவையான அரிசியின் அளவு யாது? .....

6)பெரிய வெசாக் கூடு ஒன்றின் நான்கு மூலைகளிலும் சிறிய கூடுகள் நான்கு இணைக்கப்பட்டுள்ளது. அந்த நான்கு கூடுகளின் ஒவ்வொரு மூலையிலும் மேலும் நான்கு சிறிய கூடுகள் இணைக்கப்பட்டுள்ளன. ஏனின் அதிலுள்ள மொத்தக் கூடுகள் எத்தனை?
.....

7).வகுப்பறையொன்றில் மூன்று கதிரைகளைக் கொண்ட 45 வரிசைகளும், 4 கதிரைகளைக் கொண்ட 60 வரிசைகளும் உண்டு. அவ்வரிசையில் உள்ள மொத்தக் கதிரைகள் எத்தனை? .....

www.lkedu.lk

8). பாத்திரத்தின் கொள்வளவு 4 லீட்டர் ஆகும். அதில் ¼ பகுதி நீரால் நிரப்பப்பட்டுள்ளது. இப்பாத்திரம் முழுவதும் நீர் நிரப்ப 200லீற்றர் பாத்திரத்தினால் எத்தனை தடவை நீர் ஊற்ற வேண்டும்? .....

9).புத்தக ராக்கையொன்றின் ஒரு தட்டில் 12 புத்தகங்கள் வைக்கலாம். ஏனின், 642 புத்தகங்களை வைப்பதற்கு எத்தனை தட்டுக்கள் தேவை? .....

10).3 சவர்க்காரக் கட்டிகளை வாங்கும் போது ஒன்று இலவசமாக வழங்கப்படும். 120 சவர்க்காரக் கட்டிகளை வாங்கும் போது எத்தனை இலவசமாகக் கிடைக்கும்?
.....

11).ஒரு மோட்டார் வண்டியில் 4 பேர் பிரயாணம் செய்யலாம். 48 பேர் பயணிக்க எத்தனை மோட்டார் வண்டிகள் தேவை? .....

12).ஒரு தீப்பொட்டியில் 48 தீக்குச்சிகள் உண்டு. அவ்வாறான 15 பெட்டிகளில் எத்தனை தீக்குச்சிகள் உண்டு? .....

13).உபசரிப்பிற்காக 900ml குளிர்பானம் கொண்டு வரப்பட்டது. அதில் 275ml குளிர்பானம் பருகிய பின்பு, எஞ்சிய பானத்தின் அளவு யாது? .....

14).லீட்டர் மில்லி லீட்டரில் எழுதுக.

(1) 4005ml ..... (2) 3750ml .....

15).நீர்தாங்கியொன்றில் அரைவாசிக்கு நீர் நிறைந்திருந்தது. அதிலிருந்து 25 லீட்டர் நீர் வெளியேற்றப்பட்ட பின் தாங்கியில் ¼ நீர் எஞ்சி இருந்தது எனின், அத்தாங்கி கொள்ளக்கூடிய நீரின் அளவு யாது? .....

16).12 பென்சில்களைக் கொண்ட 8 பெட்டிகளும், 60 பென்சில்களைக் கொண்ட 5 பெட்டிகளும் உண்டு எனின், 13 பெட்டிகளிலுள்ள பென்சில்கள் எத்தனை?
.....

MV MURUNKAN PRIMARY SCHOOL

www.lkedu.lk

17).ஒருவருக்கு 3 புத்தகம் வீதம் 438 புத்தகங்களை எத்தனை பேருக்கு பங்கிடலாம்?
…….

18).1l 500ml குளிர்பானத்தினை 275ml அளவான 4 கிண்ணங்களில் ஊற்றிய பின்பு எஞ்சும் குளிர்பானத்தின் அளவு யாது? ……

19).புத்தகசாலையொன்றில் 546 தமிழ் புத்தகங்களும் 98 ஆங்கிலப் புத்தகங்களும் உண்டு எனின், புத்தகசாலையிலுள்ள மொத்தப் புத்தகங்கள் எத்தனை?
……..

20).மஞ்சுவின் நிறை 42kg 500g சாமலின் நிறை 31kg 250g எனின்,

1. இருவரினதும் மொத்த நிறை யாது? ……..
2. இருவரினதும் நிறையின் வித்தியாசம் யாது? ……

MN/MURUNKAN PRIMARY SCHOOL

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

தரம் 4

zoom

அனுமதிகளுக்கு

76667-4945

சுற்றாடல்	செவ்வாய் வெள்ளி –	மாலை 07.10 – 08.00
ஆங்கிலம்	ஞாயிறு –	காலை 09.00 – 10.00
தமிழ்	வியாழன் – மாலை 07.10 – 08.00 சனி – மாலை 06.15 – 07.15	
கணிதம்	ஞாயிறு புதன் –	மாலை 06.15 – 07.15
சிங்களம்	வியாழன் –	மாலை 06.15– 07.15
SPOKEN ENGLISH	சனி –	காலை 09.00– 10.00

நுண்ணறிவு (பிரிவு–1) – சனி ஞாயிறு – இரவு 07.15–08.15

நுண்ணறிவு (பிரிவு–2) – செவ்வாய் வியாழன் – இரவு 08.00–09.00

VIDEO RECORDING வழங்கப்படும் மாதம் – 1500/=

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

தரம் 5

zoom

அனுமதிகளுக்கு

76667-4945

சுற்றாடல்	புதன் வெள்ளி –	மாலை 6.15 – 7.15
ஆங்கிலம்	செவ்வாய் –	மாலை 7.00 – 8.00
தமிழ்	சனி ஞாயிறு –	மாலை 7.15 – 8.15
கணிதம்	சனி ஞாயிறு –	காலை 6.00 – 7.00
சிங்களம்	வியாழன் –	மாலை 7.10– 8.00
SPOKEN ENGLISH	சனி –	காலை 9.00– 10.00

நுண்ணறிவு (பிரிவு–1) – சனி ஞாயிறு – மாலை 6.15–7.10

நுண்ணறிவு (பிரிவு–2) – சனி ஞாயிறு – காலை 7.00–8.00

VIDEO RECORDING வழங்கப்படும் மாதம் – 1500/=

www.lkedu.lk

மன்/முருங்கன் ஆரம்பப் பாடசாலை

கோவிட் 19 விசேட விடுமுறை பயிற்சி – 2020

கணிதம்

தரம் - 4.5

செயலட்டை - 03

தொகுப்பு ஆசிரியர்.இ.றஞ்சித்.மொறாய்ஸ்

1. எண் 35இல் எத்தனை பத்துக்கள் உள்ளன?.....

2. எண் 35இல் இலக்கம் மூன்றினால் காட்டப்படும் பெறுமதி யாது?.....

3. எண் 234இல் நூறினிடத்து இலக்கம் யாது?.....

4. 15, 9, 6 ஆகிய மூன்று எண்களுள் மிகச் சிறிய எண் யாது? மிகப் பெரிய எண் யாது? .....

5. 50 உடன் 25 ஐக் கூட்டினால் விடை யாது?.....

6. 25 உடன் 12 ஐக் கூட்டினால் விடை யாது? .....

7. 15 உடன் 20 ஐக் கூட்டினால் விடை யாது? .....

8. இரு நண்பர்களிடம் இருந்த அஞ்சல் முத்திரைகளின் எண்ணிக்கைகள் முறையே 116 உம் 125 உம் ஆகும். இருவரிடமும் உள்ள முத்திரைகளின் மொத்த எண்ணிக்கை யாது? .....

9. .17 உடன் 6 ஐக் கூட்டினால் விடை யாது?.....

MN/MURUNKAN PRIMARY SCHOOL

www.lkedu.lk

10. 23 உடன் 9 ஐக் கூட்டினால் விடை யாது?.....

11. 16 உடன் 12 ஐக் கூட்டினால் விடை யாது?.....

12.பாடசாலையொன்றில் கணிதத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை 180 ஆகும். தாய்மொழியை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை 270 ஆகும். கணிதத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையினதும் தாய்மொழியை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையினதும் கூட்டுத்தொகை யாது?.....

13.அம்மா எனக்கு 26 நாணயங்கள் தந்தார். அவற்றுள் நான் 10 ஐ உண்டியலில் இட்டேன். என்னிடம் எஞ்சியுள்ள நாணயங்கள் எத்தனை?.....

14. வகுப்பில் 36 மாணவர்கள் இருந்தனர். அவர்களுள் 21 மாணவர்கள் பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றினர். எஞ்சியோர் பாட்டுப் போட்டியில் பங்குபற்றினர். பாட்டுப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாது,….,,,,,,,….

15.வகுப்பொன்றில் உள்ள மாணவர்களின் மொத்தத் தொகை 35 ஆகும். அதில் பெண்களின் தொகை 20 ஆகும். வகுப்பில் உள்ள ஆண் பிள்ளைகளின் தொகை யாது?.....

16.நாதனின் முத்திரை சேகரிப்பில் உள்ள முத்திரைகளின் எண்ணிக்கை 35 ஆகும். அவனது அண்ணனின் முத்திரை சேகரிப்பில் உள்ள முத்திரைகளின் எண்ணிக்கை 75 ஆகும். நாதனை விட அவனது அண்ணன் சேகரித்துள்ள முத்திரைகளின் எண்ணிக்கை எத்தனையால் கூடியதாகும்? .....

MV/MURUNKAN PRIMARY SCHOOL

www.lkedu.lk

17.கடையொன்றுக்கு வாங்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை 75 ஆகும். நாளின் இறுதியில் அவற்றுள் 34 தேங்காய்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. எஞ்சிய தேங்காய்களின் எண்ணிக்கை யாது?.....

18.கடந்த ஆண்டு சுற்றுலாவில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 53 ஆகும். இவ்வாண்டில் 85 மாணவர்கள் பங்குபற்றினர். கடந்த ஆண்டை விட இவ்வாண்டில் சுற்றுலாவில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையால் அதிகரித்து இருந்தது? .....

19.பெட்டியொன்றில் 68 பைக்கற் பிஸ்கட்களை வைக்க முடியும். அதில் 45 பைக்கற்கள் இருந்தன. இன்னும் எத்தனை பைக்கற்றுகளை அதனுள் இட முடியும்? .....

20.அடுத்துவரும் எண்ணை எழுதுக?

1, 4, 7, 10 ....

2, 1, 4, 7, ...

3, 3, 6, 9, 12, ...

4, 2, 5, 8, 11, ...

5, 4, 7, 10, 13, ...

6, 9, 12, 15. 18 ....

7, 20, 23, 26. 29, ...

8, 1, 4, 7, 10, ...

MV/MURUNKAN PRIMARY SCHOOL

www.lkedu.lk

மன்/முருங்கன் ஆரம்பப் பாடசாலை

கோவிட் 19 விசேட விடுமுறை பயிற்சி – 2020

கணிதம்

தரம் - 4.5

செயலட்டை - 04

தொகுப்பு ஆசிரியர்.இ.றஞ்சித்.மொறாய்ஸ்

1.

9	7
4	0

1. தரப்பட்டுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகச் சிறிய எண்ணை எழுதுக. .....

2. மிகச் சிறிய எண்ணில் 2 குறிக்கும் பெறுமானம் யாது?


.....


2. 40 தொடக்கம் 50 வரையான எண்களை எழுதும் போது நடுவில் வரும் எண் யாது?

.....

3. இரண்டு பாத்திரங்களிலும் உள்ள நீரின் மொத்த அளவு யாது?

.....





4. காலை 7.15 ற்கு புறப்பட்ட புகையிரதம் பிற்பகல் 3.45 ற்கு கொழும்பைச் சென்றடைந்தது.

1. கொழும்பைச் சென்றடைந்த நேரத்தை நியம நேரத்தில் எழுதுக. .....

2. பயணத்திற்குச் செலவிடப்பட்ட நேரம் எவ்வளவு ?.....

5. A குவியலில் 850 தேங்காய்களும் B குவியலில் A குவியலின் இருமடங்கு தேங்காய்களும் உள்ளன. A, B ஆகிய இரு குவியல்களிலும் காணப்பட்ட மொத்தத் தேங்காய்களின் எண்ணிக்கை யாது? .....

www.lkedu.lk

6. சங்கரை விட மதன் உயரம் கூடியவன். சங்கரை விட ராமு உயரம் குறைந்தவன். எல்லோரிலும் உயரம் கூடியவன் குமார் எனின் இவர்களில் உயரம் குறைந்தவர் யார்?

.....

7.ஒரு சாடியில் 750ml நீர் உள்ளது. சாடியை முழுமையாக நிரப்ப இன்னும் 500ml நீர் தேவை எனின் சாடி கொள்ளும் நீரின் அளவு யாது?

.....

8. சமநிறை கொண்ட 5 பொதிகளின் நிறை 4kg 800g ஆகும் எனின் இரண்டு பொதிகளின் நிறை யாது? .....

9. 500ml மண்ணெண்ணெய் ரூபா 45.00 ஆகும். ஒருவர் 5l மண்ணெண்ணெய் வாங்கி கடைக்காரரிடம் ரூபா 500.00 ஐ கொடுத்தால் அவனுக்குக் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

.....

10. ஒரு பாடசாலைக்கு 3240 விசுக்கோத்துக்கள் வழங்கப்பட்டன. ஒரு மாணவனுக்கு 3 விசுக்கோத்துகள் வீதம் எத்தனை மாணவர்களுக்கு வழங்க போதுமானது?

.....

11. பின்வரும் எண்ணைச் சொற்களில் எழுதுக.

9082 : ....

12. இவ்வெண்கோலத்திற்கு அடுத்துவரும் இரு எண்களையும் எழுதுக.

3035, 3025, 3015, ..., ...

13. 3, 5, 7, 9 என்னும் எண்களைப் பயன்படுத்தி வெற்றிடங்களை நிரப்புக. (ஓர் எண்ணைப் பல தடவை பயன்படுத்தலாம்.)

I. 9 + ... + ... = 21

II. 3 + 5 - ..... = 1

14. ஒரு பாத்திரத்திலுள்ள நீரிலிருந்து 6 லீற்றர் 250 மில்லி லீற்றரை அகற்றிய பின்னர் எஞ்சியிருக்கும் கனவளவு 12 லீற்றர் 475 மில்லி லீற்றர் ஆகும். பாத்திரத்தில் முதலில் இருந்த நீரின் கனவளவு யாது?

.....

MV/MURUKAN PRIMARY SCHOOL

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

தரம் 3,4,5 நுண்ணறிவு – 2023

தரம் 03

சனி ஞாயிறு
காலை 7.00

Grade – 3 (500/=)
Grade – 4 (600/=)
Grade – 5 (700/=)

தரம் 04

பிரிவு – 01

சனி ஞாயிறு – இரவு 7.15

பிரிவு – 02

செவ்வாய் வியாழன் – இரவு 8.00

தரம் 05

பிரிவு – 01 சனி ஞாயிறு – இரவு 6.15

பிரிவு – 02 சனி ஞாயிறு – காலை 7.00

பிரிவு – 03 செவ்வாய் வியாழன் –
காலை 5.00

பரீட்சை – செவ்வாய் – மாலை 6.00

76667-4945

zoom

www.lkedu.lk

15. பொதுவித்தியாசம் இரண்டாகவுள்ள எண் கோலமொன்றை 30 இலிருந்து 5 எண்கள் வரக் கூடிய தாக அமைத்துக் காட்டுக.

.....


16. விகாஸ் பாடசாலைக்கு வந்து 2 மணித்தியாலயம் 30 நிமிடம் செலவிட்ட பின் அங்கிருந்து பி.ப 3.00 இற்குப் புறப்பட்டான்.

1. விகாஸ் பாடசாலையிலிருந்து புறப்பட்டுச் சென்ற நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.....

2. விகாஸ் பாடசாலைக்கு வந்த நேரத்தை எழுதுக. .....

17.



1. உருவிலுள்ள திண்ம உருவின் பெயர் யாது? .....

2. இத்திண்ம உருவிலுள்ள ஓரங்களின் எண்ணிக்கை யாது? .....

18. மு.ப 7.10 இற்குப் பாடசாலைக்கு வந்த சாளினி பிற்பகல் 2.05 வரைக்கும் பாடசாலையில் தங்கியிருந்து வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றாள். சாளினி பாடசாலையில் எவ்வளவு நேரம் தங்கியிருந்தாள்?

.....

19. இரண்டு பூசணிக்காய்களின் மொத்தநிறை 14kg 700g ஆகும். ஒன்றின் நிறை 6kg 900g ஆகும். எனின் மற்றைய பூசணிக்காயின் நிறையைக் காண்க.

.....

20. பழங்கள் 8 வீதம் உள்ள 3 பெட்டிகளும் பழங்கள் 6 வீதம் உள்ள 5 பெட்டிகளும் உள்ளன. 8 பெட்டிகளிலும் உள்ள மொத்தப் பழங்கள் எத்தனை?

.....

MV/MURUKAN PRIMARY SCHOOL

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

தரம் 5

zoom

அனுமதிகளுக்கு

76667-4945

சுற்றாடல்	புதன் வெள்ளி –	மாலை 6.15 – 7.15
ஆங்கிலம்	செவ்வாய் –	மாலை 7.00 – 8.00
தமிழ்	சனி ஞாயிறு –	மாலை 7.15 – 8.15
கணிதம்	சனி ஞாயிறு –	காலை 6.00 – 7.00
சிங்களம்	வியாழன் –	மாலை 7.10– 8.00
SPOKEN ENGLISH	சனி –	காலை 9.00– 10.00

நுண்ணறிவு (பிரிவு–1) – சனி ஞாயிறு – மாலை 6.15–7.10

நுண்ணறிவு (பிரிவு–2) – சனி ஞாயிறு – காலை 7.00–8.00

VIDEO RECORDING வழங்கப்படும் மாதம் – 1500/=